**திருவாரூர் மாவட்டத்தில் திருக்கோயில்களில் இரவு நேர காவல் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகிறது – மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

திருவாரூர் மாவட்டத்தில் திருக்கோயில்களில் இரவு நேர காவல் பணிக்கு தற்போது காலியாகவுள்ள கோவில் காவலர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளதால் 62 வயதிற்கு உட்பட்டவராகவும் தேக ஆரோக்கியம் உள்ளவர்களாகவும் இருக்கும் விருப்பம் உள்ள முன்னாள் படைவீரர்கள் தங்களது அசல் படைவிலகல் சான்று, அடையாள அடைடை ஆகியவற்றுடன் திருவாரூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு நேரிலோ அல்லுது அஞ்சல் மூலமோ விண்ணப்பிக்கலாம். மேலும் இது குறித்து மேற்கொண்ட தேவையான விவரங்களுக்கு திருவாரூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தினை அணுகுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருவாரூர்**